# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): பெப்ரவரி 2019

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401** **தொ.நகல்: 011-2147412** **ஏப்ரல் 11, 2019**

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2019 பெப்ரவரி மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP) வெளியிடப்பட்டுள்ளது. 2019 பெப்ரவரி மாதத்திற்கான கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2018 பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 0.6% இனால் அதிகரித்துள்ளது. இந்தக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது 2019 பெப்ரவரி மற்றும் 2018 பெப்ரவரி மாதங்களில் முறையே 104.2 மற்றும் 103.6 எனப் பதிவாகியுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் உள்ளடங்கலாக பல்வேறு பொருளாதாரக் குறிகாட்டிகளைத் தயாரித்து வெளியீடு செய்கின்றது. இந்தக் குறிகாட்டிகள் பொருளாதார முன்னேற்றத்தை அடையாளம் காண்பதற்கு, பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் பிரதான துறைகளை அடையாளம் காண்பதற்கு, பொருளாதாரத்தின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு, கொள்கை வகுப்பாக்கம் மற்றும் மதிப்பீட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

உற்பத்திக் கைத்தொழில் துறைகளின் 20 தொழில் துறைகளில் 8 துறைகளின் உற்பத்தியில் சாதகமான வளர்ச்சி பதிவாகியுள்ளது. 2018 பெப்ரவரி மாதத்தின் மாதாந்த உற்பத்திக் கொள்ளளவுடன் ஒப்பிடுகையில் 2019 பெப்ரவரி மாதத்திற்கான 'கோக் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்', 'கடதாசியும் கடதாசி உற்பத்திகள்' மற்றும் 'துணி வகை உற்பத்தி' என்பனவற்றில் முறையே 87.1%, 20.4% மற்றும் 17.5% என குறிப்பிடக்கூடிய அதிகரிப்புப் பதிவாகியுள்ளது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| பெப்ரவரி - 2019 | 104.2 |
| பெப்ரவரி - 2018 | 103.6 |
| | |
| வருடத்தின் வருட மாற்றம் (%) | 0.6 |

ஏனைய 12 கைத்தொழில் துறைகளின் உற்பத்தியின் அளவுகளில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது: 'மின் உபகரண உற்பத்திகள்', 'அடிப்படை உலோக உற்பத்தி' மற்றும் 'இயந்திர உபகரணங்கள்' உற்பத்தி', என்பனவற்றில் முறையே 20.1%, 19.2% மற்றும் 15.4% வீழ்ச்சி பதிவாகியுள்ளது. 2018 பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 பெப்ரவரி மாத உணவு உற்பத்திக் கைத்தொழில் 9.5% வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

2019 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாத உற்பத்திக் கைத்தொழில் சுட்டெண் தொடர்பான மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத் தளத்தில் (www.statistics.gov.lk) பிரசுரிக்கப்பட்டுள்ளது.